


# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 163 08.12.2025 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 163 Monday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(8–12–2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை–22

பிறை: தேய்பிறை

திதி
சதுர்த்தி இரவு 9.51 வரை
பிறகு பஞ்சமி.

நட்சத்திரம்:
புனர்பூசம் காலை 9.39 வரை
பிறகு பூசம்.

யோகம்
அமிர்த/சித்தயோகம்

ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி.

எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.

சூலம் – கிழக்கு.

நல்ல நேரம் :
காலை 6–7 மணி. மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | மேன்மை |
| ரிஷபம் | உண்மை |
| மிதுனம் | பதவி |
| கடகம் | கடமை |
| சிம்மம் | ஓய்வு |
| கன்னி | சுகம் |
| துலாம் | துணிவு |
| விருச்சிகம் | ஆர்வம் |
| தனுசு | முயற்சி |
| மகரம் | பணிவு |
| கும்பம் | தனம் |
| மீனம் | உவகை |

## மதுரை முதலீட்டாளர்கள் மாநாடு

# 56,766 பேருக்கு வேலைவாய்ப்பு; 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!




**மதுரை,டிச,8:**

மதுரையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் 'தமிழ்நாடு வளர்கிறது' என்ற தலைப்பில் நேற்று (டிச. 7) நடைபெற்றுவரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் 56,766 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ரூ. 36,660.35 கோடிக்கான 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த மாநாட்டில் மொத்தம் 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.இவற்றின் வாயிலாக 36,660.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளில் 56,766 இளைஞர்களின் புதிய வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கப்படுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரையில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதில் மேலமடை சந்திப்பு பகுதியில் ரூ.150.28 கோடியில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை நேற்று காலை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து விரகனூர் சுற்றுச்சாலை அருகே வேலம்மாள் மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஐடா ஸ்கட்டார் அரங்கில், தமிழ்நாடு வளர்கிறது என்ற தலைப்பில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.இந்த மாநாட்டில் முதல்வா ஸ்டாலின் முன்னிலையில், ரூ.36,660.35 கோடிக்கான 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அதன்பிறகு, உத்தங்குடியில் நடைபெறும் அரசு விழாவில், மேலூரில் அமையவுள்ள சிப்காட் தொழிற்பூங்காவுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டுகிறார். மேலும், மதுரையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார்.

### கோவில் நகரமான மதுரை தொழில் நகரமாகவும் புகழ்பெற வேண்டும் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றியதாவது:-

* ஆட்சிக்கு வந்ததும் தமிழகத்தின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டியது அவசரம் என உணர்ந்தோம்.
* உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களை சந்தித்தேன்.
* தமிழகத்தின் வளர்ச்சி பயணத்தில் முதலீட்டாளர்களின் பங்கு மிகவும் முக்கியம்.
* பரவலான வளர்ச்சி என்பதை எங்களது செயல்கள் மூலம் நிரூபித்து காட்டியிருக்கிறோம்.
* முதலீட்டாளர்களின் முகவரி தமிழ்நாடு என்ற நிலையை உருவாக்கினோம்.
* புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 80 சதவீத முதலீடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
* முதலமைச்சர் கேட்டார் என்பதற்காக யாரும் முதலீடு செய்ய மாட்டார்கள்.
* மாநிலத்தில் பல்வேறு விவகாரங்களை ஆய்வு செய்த பின்னரே முதலீடு செய்வது குறித்து முடிவு செய்வர்.
* மதுரையை எப்போதும் விழிப்புடன் இருக்கும் மண் என்றுதான் கூறவேண்டும்.
* கோவில் நகரமான மதுரை தொழில் நகரமாகவும் புகழ்பெற வேண்டும் என்பதே எனது ஆசை.
* இந்தியாவின் வரலாற்றை தமிழ்நாட்டில் இருந்து தொடங்கி எழுத வேண்டும்.
* தொழில் முதலீட்டிற்கு தேவையான கட்டமைப்புகள் மதுரையில் உள்ளன.
* தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை பெருக்க தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.
* விருதுநகரில் உருவாகி வரும் ஜவுளி பூங்காவால் 1 லட்சத்திற்கும் மேலானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை.
* தென்தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மையமாக மதுரை மாறி வருகிறது என்றார்.

## சென்யார் புயலால் இந்தோனேசியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 900-ஐ கடந்தது

**இந்தோனேசியா,டிச.8:**

இந்தோனேசியாவில் 'சென்யார்' புயலால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுகளில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 900-ஐ கடந்துள்ளது. மேலும்,410 பேர் மயமாகியுள்ளதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த வாரத்தில் இந்தோனேசியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் முழுவதும் ஏற்பட்ட இயற்கைபேரழிவுகளில் 1,790 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடா முன்னாள் பிரதமர் ஜஸ்டீன் ட்ருடோவுடனான உறவை உறுதிப்படுத்திய பாப் பாடகி

**கனடா,டிச.8:**

கனடா முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது மனைவி சோபி கிரிகோயரை கடந்த 2023-ம் ஆண்டு விவாகரத்து செய்தார்.

இதற்கிடையே அமெரிக்காவின் பிரபல பாட் பாடகி கேத்தி பெர்ரியுடன் ஜஸ்டின் ட்ரூடோ டேட்டிங் செய்து வருவதாக தகவல் வெளியானது. அவர்கள் இருவரும் ஒன்றாக சுற்றும் புகைப்படங்கள் வெளியாகின. ஆனால் அதுபற்றி இருவரும் கருத்து எதுவும் தெரிவிக்காமல் இருந்தனர். இந்த நிலையில் ஜஸ்டின் ட்ரூடோவுடனான உறவை இன்ஸ்டகிராமில் புகைப்படத்தைவெளியிட்டுகேத்தி பெர்ரி உறுதிப்படுத்தி உள்ளார். அவர்கள் இருவரும் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். அப்போது அவர்கள் எடுத்து கொண்ட புகைப்படத்தை கேத்தி பெர்ரி வெளியிட்டுள்ளார்.

மேலும் அந்த பதிவில் உள்ள வீடியோவில் இருவரும் ஒன்றாக உணவு உண்பதும், அவர்கள் உற்சாகமாக நேரத்தை செலவிடும் தருணங்களும் உள்ளன. இதற்கு டோக்கியோ சுற்றுப்பயண நேரங்கள் என்று கேத்தி பெர்ரி தலைப்பிட்டுள்ளார்.

## வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**மதுரை,டிச,8:**

மதுரை தொண்டி சாலை மேலமடை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள வீரமங்கை வேலுநாச்சியார் பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

ரூ.150 கோடி மதிப்பீட்டில் 1 கி.மீ நீளத்தில், 4 வழிச்சாலையாக கட்டப்பட்டுள்ள இந்த புதிய மேம்பாலம் சிவகங்கை மாவட்டத்தையும், மதுரை மாவட்டத்தையும் இணைக்கும் முக்கிய சாலையில் அமைந்துள்ளது. இந்த மேம்பாலத்திற்கு கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலமைச்சர் அடிக்கல் நாட்டியிருந்தார்.



முன்னதாக, மதுரை கருப்பாயூரணி பகுதியில், மக்கள் விடுதலைக் கட்சியின் நிறுவனரும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகவேல் ராஜன் இல்லத் திருமண விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

## தாம்பரம் – நாகர்கோவில் ரயில் உள்பட 3 சிறப்பு ரயில்கள் இயக்கம்

**சென்னை,டிச,8:**

நாகர்கோவில் இருந்து நேற்று (7-ம் தேதி) இரவு 11.15 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் (06012) புறப்பட்டு, மறுநாள் முற்பகல் 11.15 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும்.

மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து நாளை (8-ம் தேதி) பிற்பகல் 3.30 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் (06011) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 4.15 மணிக்கு நாகர்கோவிலை அடையும்.

கோயம்புத்தூரில் இருந்து நேற்று இரவு 11.30 மணிக்கு சிறப்பு ரயில் (06024) புறப்பட்டு, மறுநாள் காலை 9.20 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும்.

மறுமார்க்கமாக, சென்னை சென்ட்ரலில் இருந்து நாளை நண்பகல் 12.20 மணிக்கு சிறப்பு ரயில்(06023) புறப்பட்டு, அதேநாள் இரவு 10.30 மணிக்கு கோயம்புத்தூரை அடையும்.

திருவனந்தபுரம் வடக்கு நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 3.45 மணிக்கு சிறப்பு ரயில் (06108) புறப்பட்டு, நாளை முற்பகல் 11.20 மணிக்கு சென்னை எழும்பூரை வந்தடையும்.

மறுமார்க்கமாக, சென்னை எழும்பூரில் இருந்து நாளை மதியம் 1.50 மணிக்கு சிறப்பு ரயில் (06107) புறப்பட்டு, மறுநாள் காலை 8 மணிக்கு திருவனந்தபுரம் வடக்கு ரயில் நிலையத்தை அடையும்.

இந்த சிறப்பு ரயில் பெரம்பூர், காட்பாடி, ஜோலார்பேட்டை, போத்தனூர், பாலக்காடு வழியாக இயக்கப்படும். இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கி உள்ளது. இத்தகவல், தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை: ஜிஎஸ்டி ஆணையரக அலுவலகத்தில் தீவிபத்து! முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசம்!

**சென்னை,டிச.8:**

திருமங்கலம் அருகே ஜிஎஸ்டி ஆணையரக அலுவலகத்தில் ஏற்பட்ட தீவிபத்தால், அங்கிருந்த தளவாடப் பொருள்கள், முக்கிய ஆவணங்கள், மின்னணு உபகரணங்கள் எரிந்து நாசமாகின.

சென்னை அண்ணா நகர் பகுதியில் உள்ள ஜிஎஸ்டி ஆணையரக அலுவலகத்தில் தீவிபத்து ஏற்பட்டது. தீவிபத்து குறித்து தகவல் அறிந்ததும் 6 வண்டிகளில் வந்து தீயணைப்புப் படையினர், சுமார் 2.30 மணி நேரம் தீவிரமாகப் போராடி தீயை



கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீவிபத்து காரணமாக, ஜன்னல் வழியாக கரும்புகைகள் வெளியேறின. இதனால் அப்பகுதி முழுவதுமே கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது. ஜிஎஸ்டி ஆணையரக அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள உணவகத்தில், மின் கசிவு ஏற்பட்டதன் காரணமாக, தீவிபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிருந்த தளவாடப் பொருள்கள், முக்கிய ஆவணங்கள், மின்னணு உபகரணங்கள் எரிந்து சேதமாகின. தீவிபத்துக்கான காரணம் குறித்து தடயவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.




## ரிக்டர் அளவில் 7 ஆக பதிவு: அமெரிக்காவின் அலாஸ்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

**அமெரிக்கா,டிச.8:**

அமெரிக்காவின் அலாஸ்கா-கனடா எல்லையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

அலாஸ்காவின் ஜூனாவ் வில் இருந்து வடமேற்கே சுமார் 370 கிலோமீட்டர் தொலைவிலும், கனடாவின் யூகோனின் வைட்ஹார்சுக்கு மேற்கே 250 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது ரிக்டர் அளவில் 7 ஆக பதிவானது. 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இந்த நிலநடுக்கம் அலாஸ்கா வின் யாகுடாட், ஜூனாவ் ஆகிய இடங்களில் உணரப்பட்டது.

சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் வீடுகள் பயங்கரமாக குலுங்கின. இதனால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டபோதிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கைமையம் தெரிவித்தது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை.



# இடைக்காட்டூர் சித்தர் கோவிலில் ரஜினி பிறந்த நாள் விழா





**சிவகங்கை, டிச .08:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூரில் பிரசித்தி பெற்ற பதினெட்டு சித்தர்களில் ஒருவரான இடைக்காடார் சித்தர் கோவில் உள்ளது. இங்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்வார்கள். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு தமிழக சூப்பர் ஸ்டார் கழகம் மற்றும் இடைக்காடர் பௌர்ணமி அன்னதான குழுவினர் இணைந்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பல்லாண்டு வாழ வேண்டி இடைக்காடர் சித்தர் சன்னதியில் சிறப்பு யாகம் நடத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து விநாயகர், முருகன், நவ கிரகங்கள் சன்னதியில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் சிவகங்கை மாவட்ட ஸ்டார் கழக நிர்வாகிகள் ரஜினி ரசிகர்கள் பக்த்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

# திருச்செந்தூர் கோவிலில் பக்தர்கள் 4 மணிநேரம் காத்திருந்து தரிசனம்



**திருச்செந்தூர், டிச.08:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக தலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர். குறிப்பாக தூத்துக்குடி, தென்காசி, நெல்லை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பக்தர்கள் அதிகமாக வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

வார விடுமுறை மற்றும் விடுமுறை நாட்களில் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர். தற்போது ஐயப்ப பக்தர்கள் சீசன் என்பதால் வழக்கத்தை விட அதிகமாக கூட்டம் காணப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளான நேற்று அதிகாலையில் இருந்தே ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 4 மணி நேரம் வரை காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

வழக்கம் போல் கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# மத்திய தரைக்கடலில் அகதிகள் படகு கவிழ்ந்து 18 பேர் உயிரிழப்பு



**இந்தோனேசியா,டிச.08:** மலாக்கா நீரிணை மற்றும் தெற்கு அந்தமானை ஒட்டிய பகுதியில் உருவான சென்யார் புயல் தாய்லாந்து, இந்தோனேசியா நாடுகளில் கரையை கடந்து காணாமலையை கொடுத்தது.

இந்தோனேசியாவில் 'சென்யார்' புயலால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுகளில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 900-ஐ கடந்துள்ளது. மேலும், 410 பேர் மயமாகியுள்ளதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த வாரத்தில் இந்தோனேசியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் முழுவதும் ஏற்பட்ட இயற்கை பேரழிவுகளில் 1,790 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திட்டக்குடியில் கல்வி விழிப்புணர்வு பேரவையின் சார்பில் விருது வழங்கும் விழா அமைச்சர் சி.வெ.கணேசன் பங்கேற்பு



**திட்டக்குடி.டிச:08:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி தனியார் திருமண மண்டபத்தில் கல்வி விழிப்புணர்வு பேரவை சார்பில் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி,மற்றும் கல்லூரி மாணவர்கள் தூய்மை பணியாளர்களின் குழந்தைகள் ஆகிய 300க்கும் மேற்பட்டோருக்கு நற்பண்புகள் மற்றும் நற்பணிப்பிற்கான சான்றோர் விருது வழங்கும் விழா நிறுவனத் தலைவர் வை.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியர் இலட்சாதிபதி அனைவரையும் வரவேற்றார். நிலச்சந்திரன், பாஸ்கர்,கதிரவன் ராஜா மணி,ரவி,மணிமாறன்,சுந்தரபாண்டியன்,கிருஷ்ண மூர்த்தி, கலைமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு சுமார் 300-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களுக்கு நற்பண்புகள் மற்றும் நற்படிப்பிற்கான மாணவச் சான்றோர் விருது மற்றும் கடந்த கொரோனா காலக்களப்பணியில் தன் உயிரினை துச்சமென நினைத்து மக்களின் இன்னுயிரைக் காக்க கொரோனா காலம் முழுவதும் களத்தில் செயல்பட்டமைக்கு வீரபாண்டியன் கதிரவன் சக்திவேல் சுனில் குமார் ராகுல் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு கல்வி விழிப்புணர்வு பேரவையின் மக்கள் சேவகர் விருதுகளை வழங்கி அனைவருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

திட்டக்குடி துணைத் தலைவரும் திமுக நகர செயலாளர் பரமகுரு, ஒன்றிய செயலாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினர். முன்னதாக அமைச்சருக்கு கல்வி விழிப்புணர்வு பேரவையின் சார்பில் பட்டாசு வெடித்து சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் தலைமையாசிரியர் ஜெயசங்கர், திமுக அயலக அணி மாவட்ட அமைப்பாளர் சேதுராமன், பேரவை பொறுப்பாளர்கள் பாலசேகர், பிரபா,வழியரசன்,வீரராஜன், வீரபாண்டியன் கதிரவன் சக்திவேல் சுனில் குமார் கிருஷ்ணமூர்த்தி வல்லரசு ராகுல் மற்றும் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மீனாட்சி அம்மன் கோவிலை சுற்றி புதிய பாதாள சாக்கடை திட்டம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**மதுரை, டிச.08:** மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 6 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அவை வருமாறு:-

* மதுரை மாநகரில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பல காலமாக எதிர்பார்க்கப்பட்ட வைகை ஆற்றின் வடகரையில், விரகனூர் சுற்றுச்சாலை முதல் சக்குடி வரை 8.4 கிலோமீட்டர் நீளத்துக்கு 130 கோடி ரூபாய் செலவில் புதிய சாலை அமைக்கப்படும்.

* மதுரை மாநகரின் முக்கிய பகுதிகளான, மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி இருக்கின்ற 4 மாசி வீதிகள், வெளி வீதிகள், புதூர், அண்ணா நகர், சந்தைப்பேட்டை, தெற்கு வாசல், எஸ்.எஸ்.காலனி, ஆரப்பாளையம், அரசரடி, பழங்காநத்தம், பைக்காரா உள்ளிட்ட பகுதிகளில், இப்போது இருக்கின்ற பழைய பாதாளசாக்கடைக் குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

* மதுரை கிழக்கு வட்டத்தில் இருக்கின்ற உத்தங்குடி உபரி நீர்க் கால்வாயில் 7 கோடி ரூபாய் செலவில், தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* மேலூர் வட்டத்தில் இருக்கின்ற கேசம்பட்டி கிராமம்-பெரிய அருவி நீர்த்தேக்கம் மற்றும் அதைச் சார்ந்த கண்மாய்கள் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மேலும், மேலூர் வட்டம் சூரப்பட்டி அருகே பாலாற்றின் குறுக்கே 9 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டப்படும்.

* மதுரை மேற்கு வட்டத்தில் இருக்கின்ற கொடி மங்கலம், மேலமாத்தூர், புதுக்குளம் மற்றும் விளாச்சேரி கிராமங்களில் இருக்கின்ற பல்வேறு ஏரிகள் மற்றும் கால்வாய்கள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

இவை உள்ளிட்ட 6 புதிய அறிவிப்புகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

# இந்திய ஆயுதப் படைகள் கொடி தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா



**மேலூர், டிச.08:** இந்திய ஆயுதப் படைகள் கொடி தினத்தை முன்னிட்டு யானைமலை கிரீன் பவுண்டேஷனின் 244 ஆவது வார மரக்கன்றுகள் நடும் விழா ஒத்தக்கடை மேலூர் மெயின் ரோட்டில் தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் நடைபெற்றது.

யானைமலை கிரீன் பவுண்டேஷன் ஆலோசகர் ராகேஷ் முன்னிலை வகித்தார். உறுப்பினர் பாலமுருகன் வரவேற்றார். உறுப்பினர் பாஸ்கரன் தொகுத்து வழங்கினார். தலைமை ஆசிரியர் தென்னவன் அவர்கள், இந்திய ராணுவத்தின் வலிமை, முப்படைகள் குறித்து உரை நிகழ்த்தினார். புங்கை மரக்கன்றுகள் நடப்பட்டன. மரக்கன்றுகளுக்கு கவாத்து பணி, பராமரிப்பு பணி, களப்பணி முதலியன நடைபெற்றது. நீர் ஊற்றப்பட்டது.

'மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம், இயற்கையைக் காப்போம்' என்ற உறுதிமொழி ஏற்கப்பட்டது. விழாவில் யானைமலை கிரீன் பவுண்டேஷன் ஆலோசகர்கள், உறுப்பினர்கள் டாக்டர் முத்துமணி, தல்லாகுளம் அஞ்சலக பணியாளர் பிரேம், மீனாட்சி தட்டச்சு உரிமையாளர் ஜெயபாலன், தியாகராசர் மேல்நிலைப் பள்ளி தமிழாசிரியர் கார்த்திக், ஐஸ்வர்யா, பாலா மணி , சரண், பிரசீத், ஜெய்சீத், ஹரி மற்றும் பசுமை சாம்பியன் அசோக்குமார், சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் கைகளால் மரக்கன்றுகள் நடப்பட்டன. உறுப்பினர் ரூபன் நன்றி கூறினார்.

# மேகமலை அருவியில் 50-வது நாளாக சுற்றுலா பயணிகளுக்கு தடை



**வருசநாடு, டிச.08:** தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளான மேகமலை, வெள்ளிமலை உள்ளிட்ட பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக கோம்பைதொழு அருகே வனப்பகுதியில் அமைந்துள்ள மேகமலை அருவியில் தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. 40 அடி உயர பாறையில் இருந்து தண்ணீர் ஆர்ப்பரித்து விழுகிறது.

ஏற்கனவே அருவியில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளம் காரணமாக அருவிப்பகுதிக்கு செல்லும் படிக்கட்டுகள், பாதைகள், பாதுகாப்பு தடுப்புகள் சேதமடைந்து சுற்றுலாப்பயணிகள் அருவிப்பகுதிக்கு செல்வதற்கும் அருவியில் குளிப்பதற்கும் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த தடை 50ஆவது நாளாக இன்றும் தொடர்கிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ள நிலையில் விரைவில் நிதி ஒதுக்கப்பட்டு அருவியின் சேதமடைந்த பகுதிகள் சீரமைக்கப்பட வேண்டும் என சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 138.70 அடியாக உள்ளது. 1033 கனஅடி நீர் வருகிற நிலையில் 1600 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 6798 மி. கனஅடி நீர் இருப்பு உள்ளது.

71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் 63.94 அடியாக உள்ளது. 1759 கன அடி நீர் வருகிற நிலையில் மதுரை மாநகர குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 1419 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 4398 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 49.30 அடியாக உள்ளது. 81 கன அடி நீர் வருகிற நிலையில் திறப்பு இல்லை. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவான 126.28 அடியில் நீடித்து வருகிறது. அணைக்கு வரும் 119 கன அடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது. சண்முகா நதி அணையின் நீர்மட்டம் 43.50 அடியாக உள்ளது. 21 கன அடி நீர் வருகிற நிலையில் 14.47 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

# "மாமன், மச்சானாக பழகுகிறோம்; தீபம் ஏற்றுவதில் இஸ்லாமியர்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை"



## நயினார் நாகேந்திரன் பேட்டி

**மதுரை,டிச.08:** மதுரை தொண்டி சாலையில் வீரமங்கை வேலுநாச்சியார் பெயரில், ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய மேம்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார். தொடர்ந்து உத்தங்குடியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் ஒரு லட்சத்து 211 பயனாளிகளுக்கு 174 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டா வழங்கினார்.

மேலும், 3 ஆயிரத்து 65 கோடி ரூபாயில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக விழாவில் பேசிய அவர், அனைத்து மதத்தினரும் அங்காளி, பங்காளியாக பழகும் மண்ணில் பெரியார் ஏற்றிய சமத்துவ தீபமே ஒளிரும் என தெரிவித்தார்.

இந்நிலையில் இதுதொடர்பாக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர்,

"திருப்பரங்குன்றம் விவகாரத்தில் முதலமைச்சரை நினைத்தால் வருத்தமாக உள்ளது. நான் அவரை பலகோணங்களில் பார்த்துள்ளேன். என்னை பொறுத்தவரை அவர் சிறந்த மனிதர். ஆனால், அவர் ஆட்சியை அவ்வாறு கூற முடியவில்லை. அவர்கள் வேண்டுமானால் அங்காளி, பங்காளியாக இருக்கலாம்.

நாங்கள் இஸ்லாமியர்களோடு மாமன், மச்சானாகத் தான் பழகுகிறோம். இந்த விவகாரத்தில் நீதிமன்ற தீர்ப்பையே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். தீர்ப்புக்கு பின் 144 தடை உத்தரவு என்பது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல். முதலமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் என யாராக இருந்தாலும் தீர்ப்பை அவமதித்தவர்கள், தவறு செய்தவர்களாகவே கருதப்படுவர்.

தீபம் ஏற்றுவதால் எந்த இஸ்லாமிய பெருமக்களுக்கும் வருத்தம் இல்லை. இதற்கு எதிராக வழக்குகளும் இல்லை. தீபாவளிக்கு பிறகு பெரும்பான்மையான மக்களால் கார்த்திகை தீபம் கொண்டாடப்படுகிறது. இந்த சூழலில் மக்களை சந்தோஷப்படுத்துவதை விட்டுவிட்டு, 2026 சட்ட மன்ற தேர்தலை கணக்கில்கொண்டு அங்காளி, பங்காளி என்ற வார்த்தையை வாக்குவங்கிக்காக முதலமைச்சர் பயன்படுத்துகிறார் என்பதை பகிரங்கமாக தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

### தூத்துக்குடியில்

# 500 ரூபாய் போலி நோட்டுகளை புழக்கத்தில் விட்ட 2 பேர் கைது







**தூத்துக்குடி, டிச.8:** தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பகுதியில் உள்ள ஒரு ஓட்டலில் கோவில்பட்டி சரமாரி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சரவணன் (வயது 28) என்பவர் வேலை பார்த்து வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் பள்ளிவாசல் தெருவில் உள்ள பெட்டிக்கடை வியாபாரியிடம் 500 ரூபாய் போலி நோட்டை கொடுத்து சில்லரை கேட்டார். இதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், சரவணனை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

அதில் அவர் வைத்திருந்த ரூபாய் நோட்டுகள் குழந்தைகள் விளையாடுவதற்காக கடைகளில் விற்கப்படும் போலி ரூபாய் நோட்டுகள் என்பது தெரியவந்தது. மேலும் சரவணன் மாஸ்டராக பணிபுரியும் ஓட்டலில் சோதனை நடத்தி, கட்டுக்கட்டாக 70 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான போலியான 500 ரூபாய் நோட்டுகளை பறிமுதல் செய்து, அசாம் மாநிலத்தை சேர்ந்த குமார் சர்மா(45) மற்றும் சரவணன் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

### கும்பகோணம் அருகே பள்ளி மாணவர்கள் இடையே மோதல்

# தாக்கப்பட்ட பிளஸ்-2 மாணவர் மூளைச்சாவு

**தஞ்சாவூர், டிச.8:** திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பகுதியை சேர்ந்தவர் குணசேகரன். இவருடைய மகன் கவியரசன் (17 வயது) . இவர் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரம் அறிஞர் அண்ணா அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படித்து வந்தார். இந்த பள்ளியில் பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 மாணவர்கள் இருதரப்பினர் இடையே பிரச்சினைகள் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் மாணவர் கவியரசன் மற்றும் பிளஸ்-1 மாணவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதில் பிளஸ்-1 மாணவர் ஒருவர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது தொடர்பாக போலீசார் இருதரப்பு பெற்றோரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

அதனை தொடர்ந்து கடந்த 3-ந்தேதி மதியம் மீண்டும் இரு தரப்பு மாணவர்களுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து 4-ந்தேதி மாலை சிறப்பு வகுப்பை முடித்துவிட்டு பள்ளியில் இருந்து கவியரசன் தனது நண்பர்களுடன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் கோவில் அருகே சென்றபோது அங்கு வந்த பிளஸ்-1 மாணவர்கள், கவியரசனிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் கவியரசனை பிளஸ்-1 மாணவர்கள் மரக்கட்டையால் தலையில் தாக்கினர். இதில் காயம் அடைந்த கவியரசனை சக மாணவர்கள் மற்றும் அக்கம், பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு கவியரசனை பரிசோதனை செய்தபோது அவருக்கு தலையில் ரத்தகசிவு ஏற்பட்டு இருப்பது தெரிய வந்தது. பின்னர் தஞ்சையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மாணவர் கவியரசன் உடல் நிலை மோசமானது.

தொடர்ந்து தனியார் மருத்துவமனையில் இருந்து தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் மாணவர் கவியரசன் மூளைச்சாவு அடைந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியதாக போலீசார் தெரிவித்தனர். இந்த பிரச்சினை தொடர்பாக பட்டீஸ்வரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிளஸ்-1 மாணவர்கள் 15 பேரை நேற்று முன்தினம் கைது செய்து தஞ்சையில் உள்ள இளம் சிறார் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறுவர் சீர்திருத்தபள்ளியில் அடைத்தது குறிப்பிடத்தக்கது.




# சிவகங்கை: குன்னத்தூர் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய தேர்பவனி

**சிவகங்கை, டிச.8:** சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஒன்றியம், குன்னத்தூர் பங்கு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் குடும்ப விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான விழா கடந்த திங்கள்கிழமை செப மாலை, புகழ் மாலை, கொடியேற்றம், திருப்பலியுடன் விழா ஆரம்பமானது.




நவநாள் திருப்பலியைத் தொடர்ந்து நேற்று சனிக்கிழமை இரவு திருவிழா திருப்பலி மற்றும் புனிதரின் தேர்பவனி நடைபெற்றது.

மலர் மற்றும் மின் அலங்காரத்துடன் அலங்கரிக்கப்பட்ட தேரில் சவேரியார் எழுந்தருளி முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து மக்களுக்கு காட்சி அளித்தார். ஏராளமான மக்கள் பங்கேற்று தேர் இழுத்து வழிபட்டனர்.

தேர்பவனியின் போது தங்கள் வீடுகள் தோறும் இறைமக்கள் சாம்பிராணி தூபம் மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி வழிபாடு நடத்தினர்.

முடிவில் நற்கருணை ஆராதனை விழா நடைபெற்று. இன்று மாலை கொடியிறக்கம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### தேன் குடிக்க சென்று 300 அடி உயர மலையில்..

# பாறைகளுக்கு நடுவே சிக்கிய கரடி

**கோத்தகிரி, டிச.8:** நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் இருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கரிக்கையூர் பழங்குடியின கிராமம். இந்தநிலையில் நேற்று மாலை இந்த கிராம பகுதியில் சுமார் 300 அடி உயர செங்குத்தான மலை பகுதியில் உள்ள தேனை எடுத்து குடிக்க கரடி ஒன்று ஏறி சென்றுள்ளது. அப்போது எதிர்பாராதவிதமாக அந்த கரடி அங்குள்ள 2 பாறைகளுக்கு இடையே சிக்கி வெளியே வர முடியாமல் தவித்துள்ளது.



இதனை சிறிதுநேரம் கழித்து அவ்வழியாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த சோலூர் மட்டம் வனத்துறையினர் கண்டு உடனே உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில் 10 பேர் கொண்ட குழுவினர் விரைந்து வந்து கரடியை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் கரடியை மீட்க முடியாததால் அதற்கு மயக்க ஊசி செலுத்தி, தீயணைப்புத்துறையினர் உதவியுடன் மீட்பது என முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து கரடிக்கு கால்நடை டாக்டர் மயக்க ஊசி செலுத்திய சிறிதுநேரத்தில் கரடி மயக்க நிலைக்கு சென்றது. இதையடுத்து தீயணைப்பு படை வீரர்கள் செங்குத்தான மலையில் கரடி சிக்கிய பாறையில் கயிறு கட்டி இறங்கி சுமார் 2 மணி நேர போராட்டத்திற்கு பின் கரடியை பாதுகாப்பாக உயிருடன் மீட்டு கொண்டு வந்தனர். பின்னர் கரடிக்கு உரிய சிகிச்சை அளித்து வனப்பகுதியையொட்டி விடப்பட்டது. தொடர்ந்து மயக்கம் தெளிந்த கரடி வனப்பகுதிக்குள் ஓடிச்சென்றது. இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# சென்னையில் ஒரே நாளில் 100 இண்டிகோ விமானங்கள் ரத்து - பயணிகள் அவதி

**சென்னை, டிச.8:** உள்ளாட்டு விமான பயணங்களில் விமானிகள் மற்றும் பணியாளர்களுக்கான புதிய பணி நேரக்கட்டுப்பாடு கடந்த 1-ந்தேதி முதல் அமலுக்கு வந்தது. இதன்படி விமானிகள் தொடர்ச்சியாக 18 மணி நேரம் வேலை பார்க்கலாம் என்ற விதியை திருத்தி 8 மணி நேரமாக குறைத்தது. விமானிகளின் விடுப்பு நேரம் முன்பு வாரத்திற்கு 36 மணி நேரமாக இருந்தது. அது தற்போது 48 மணி நேரமாக அதிகரித்தது.

மேற்கண்டவை உள்ளிட்ட பல்வேறு புதிய நடைமுறைகளை அமல்படுத்த மற்ற விமான நிறுவனங்கள் படிப்படியாக தேவையான ஏற்பாடுகளை செய்தது. ஆனால் இண்டிகோ விமான நிறுவனம் இதில் மெத்தனம் காட்டியதாக விமானிகள் கூட்டமைப்பு குற்றம்சாட்டியது.

இதன் காரணமாக உள்நாட்டில் அதிகளவில் விமானங்களை இயக்கும் இண்டிகோ நிறுவனம் சிக்கல்களை சந்தித்து வருகிறது. கடந்த 3 நாட்களாக அந்த விமானங்கள் தாமதம் மற்றும் ஏராளமான விமானங்கள் ரத்து காரணமாக பயணிகள் பரிதவித்தனர்.

இதை பயன்படுத்தி மற்ற விமான நிறுவனங்கள் தங்கள் விமான கட்டணங்களை பன்மடங்கு அதிகரித்தன.

இந்நிலையில், இன்றும் இண்டிகோ விமானச் சேவை ரத்து செய்யப்படுவதால் டிக்கெட் முன்பதிவு செய்த பயணிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். சென்னையில் மட்டும் இன்று ஒரே நாளில் 100 இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

# மாதாந்திர பராமரிப்பு பணி: திருநெல்வேலியில் நாளை மின்தடை


**திருநெல்வேலி, டிச.8:** திருநெல்வேலி நகர்ப்புற கோட்ட செயற்பொறியாளர் முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தியாகராஜ நகர், பொருட்காட்சி திடல் மற்றும் பழையபேட்டை துணைமின் நிலையங்களில் நாளை மறுநாள் (9.12.2025, செவ்வாய்க்கிழமை) மின்வாரிய மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறயிருப்பதால், காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை தியாகராஜ நகர், மகாராஜாநகர், ராஜகோபாலபுரம், சிவந்திபட்டி, குத்துக்கல், கொடிக்குளம், முத்தூர், I.O.B காலனி, தாமிரபதி காலனி, மல்லிகா காலனி, ஸ்ரீராமன்குளம், A.R.Line, கோரிப்பள்ளம், ரயில்வே பீடர் ரோடு, EB காலனி, ராஜேந்திரன் நகர், ராம்நகர், காமராஜர் சாலை, அன்புநகர், என்.எச்.காலனி, சித்தார்த்நகர் மற்றும் லக்கி காலனி ஆகிய பகுதிகளில் மின்தடை செய்யப்படும்.

மேலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திருநெல்வேலி டவுன், மேல ரதவீதி மேல் பகுதிகள், தெற்கு ரதவீதி தெற்கு பகுதிகள், வடக்கு ரதவீதி வடக்கு பகுதிகள், பழையபேட்டை, காந்திநகர், திருப்பணிகரிசல்குளம், வாகைகுளம், குன்னத்தூர், பேட்டை, தொழிற்பேட்டை, பாட்டபத்து, அபிஷேகப்பட்டி, பொருட்காட்சிதிடல், திருநெல்வேலி டவுன் SN ஹைரோடு, பூம்புகார், ஸ்ரீபுரம், சிவந்திரோடு, சுந்தரர் தெரு, பாரதியார் தெரு, C.N.கிராமம், குறுக்குத்துறை, கருப்பன்துறை, டவுன் கீழ ரதவீதி, போஸ் மார்க்கெட், A.P. மாடத் தெரு, சாமி சன்னதி தெரு, அம்மன் சன்னதி தெரு, மேல மாடவீதி, கள்ளத்திமுடுக்கு தெரு, நயினார்குளம் ரோடு, சத்தியமூர்த்தி தெரு, போத்தீஸ் நயினார்குளம், மார்க்கெட், வ.உ.சி.தெரு வையாபுரி நகர், பாரத் இந்துஸ்தான் பெட்ரோலியம், சிவன் கோவில், தெற்கு தெரு, ராம்நகர் மற்றும் ஊர்உடையான் குடியிருப்பு பகுதிகளிலும் பாதுகாப்புக் கருதி மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வள்ளியூர் கோட்ட செயற்பொறியாளர் வளன்அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வள்ளியூர், திசையன்விளை, கோட்டைகருங்குளம், கூடங்குளம் மற்றும் களக்காடு துணைமின் நிலையங்களில் நாளை மறுநாள் (9.12.2025, செவ்வாய்க்கிழமை) மின்வாரிய மாதாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட துணைமின் நிலையங்களில் மின்விநியோகம் தடை செய்யப்படும். எனவே பின்வரும் ஊர்கள் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் மின்விநியோகம் இருக்காது.



# தினம் ஒரு குறள்

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.** - குறள் 155

మానికముగ గొంద్రు మన్నించు వానిని
ఆడిపోను కొంద్రు రాత్రగాని - కురల్ 155

**प्रतिकारी को जगत तो, माने नहीं पदार्थ ।**
**क्षमशील को वह रखे, स्वर्ण समान पदार्थ ॥** - कुराल 155

Oruththaarai Ondraaka Vaiyaare Vaippar
Poruththaaraip Ponpor Podhindhu - Kural 155

# அன்புமணி பாமக தலைவர் இல்லை என்பது உறுதியாகிவிட்டது

### டெல்லி ஐகோர்ட் தீர்ப்பு குறித்து ராமதாஸ் அறிக்கை








**சென்னை, டிச.8:** பா.ம.க. நிறுவனத் தலைவர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நான் டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் 04.12.2025 அன்று நடந்த விசாரணையில் நேற்று 06.12.2025 தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பில் நான் தொடர்ந்த வழக்கில் எனக்கு வெற்றி கிடைத்துள்ளது. மருத்துவர் அன்புமணி பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது செல்லாது. அதன்படி பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி என்று சொல்லுவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு சட்ட அதிகாரம் இல்லை என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே அன்புமணி கட்சியின் தலைவர் இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு அங்கீகாரம் இல்லாததால், தேவை ஏற்படின் நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 28.05.2022 முதல் 28.05.2025 வரை மூன்றாண்டு காலம் தலைவர் பதவி என்பதற்கு மாறாக, ஒரு போலி ஆவணத்தை (கடிதம்) தயாரித்து 2023 முதல் 2026 வரை என்று தேர்தல் ஆணையத்திற்கு அன்புமணி கொடுத்த போலி கடிதத்தை ஏற்று தேர்தல் ஆணையம் அன்புமணி தலைவர் என்று அறிவித்தது. தேர்தல் ஆணையம் அறிவித்தது செல்லாது என்பது உறுதியாகிவிட்டது.

எனவே நான் 46 ஆண்டு காலம் உழைத்து 96 ஆயிரம் கிராமங்களுக்கு சென்று இயக்கத்தை வளர்த்து மருத்துவர் அன்புமணியை மத்திய அமைச்சராக மேலும் பலரை மத்திய அமைச்சர்களாக, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, உள்ளாட்சி பிரதிநிதிகளாக வெற்றி பெற செய்த என்னிடமிருந்து கட்சியை பறிப்பதற்கு செய்த சதி திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் என்னிடமிருந்து கட்சியையும், கட்சி தொண்டர்களையும், நாட்டு மக்களையும் பிரிக்க முடியாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. வரும் தேர்தலில் கட்சியின் அங்கீகாரத்தை மீட்டெடுத்து மக்களுக்கு உரிமைகளை பெற்று தருவதே என்னுடைய பணியாக ஏற்று மக்கள் பணி ஆற்றுவேன்.


தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மீண்டும் வெல்லும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. நீதி வென்றுள்ளது.

### சென்னையில் போதைப் பொருள் வேட்டை

# இதுவரை 29 வெளிநாட்டினர் கைது







**சென்னை, டிச.8:** சென்னையில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவின் நடவடிக்கையால் வானகரம் பகுதியில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த வழக்கில் 8 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களோடு தொடர்பில் இருந்த சூடான் மற்றும் நைஜீரியா நாட்டைச்சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, இதுவரை போதைப்பொருள் வழக்குகளில் 29 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் சென்னை மாநகர போலீசார் போதை பொருட்களை தடுப்பதற்கு தொடர் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# கவிதை அரங்கம்!





நாளைய வாழ்க்கையை
சிறப்பாக மாற்றுவது,
இன்றைய எண்ணங்களும்
செயல்களும் தான்

சவால்கள் இல்லை
என்றால்
வாழ்க்கையில் நீங்கள்
முன்னேறவில்லை
என்று தான்
அர்த்தம்

எதுவாக இருந்தாலும் சரி
மூழ்கிவிடாதே


மிதக்க கற்றுக்கொள்

விட்டுவிடாதீர்கள்
ஆரம்பம் எப்போதும்
கடினமானது

கூராக தீட்டப்படாத
ஆயுதமும் அறிவும்
எதையும் வெட்டப்
போவதில்லை

போராடி தோற்பதும்
வெற்றிக்கு சமம்

## கனவு இல்லம் கனவாகலாம்...



இருளின் நடுவிலும் ஒளியை சுமந்து நிற்கும் நிலா,
நமக்கு ஒரு உண்மையை நினைவூட்டுகிறது—
எவ்வளவு இருள் சூழ்ந்தாலும்,
நம்முள்ளே இருக்கும் ஒளி மங்கிவிடக்கூடாது.
தேய்ந்தாலும்... மறைந்தாலும்...
பின்பு தோன்றினாலும்...
ஒளியை இழந்து விடாத நிலவைப் போல
நம் உள்ளத்தில் அன்பு இருந்தால்,
நம் ஒளி ஒருபோதும் மங்கி விடாது.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# பெயரைத் தேடுகிறேன்



அங்கேதான் வைத்திருப்பார், புத்தக அலமாரியில் தான் எங்கேனும் இருக்கும்; தேடிப்பார்த்து எடுத்துட்டு வா; என்று அப்பா எளிதாக சொல்லிவிட்டார். தாத்தாவுக்கு அவருடைய எஸ். எஸ். எல், சி புக்கை பார்க்கணுமாம்.

சிவப்பு காலிக்கோ அட்டையில் 52874 என்று (அவருடைய எஸ். எஸ். எல்.சி. யில் ரெஜிஸ்டரேஷன் எண்) லேபில் ஒட்டியிருக்கும்; என்று அடையாளம் சொல்கிறார். அந்த சர்டிஃபிகேட் புத்தகத்தில் உள்ள பதிவைப் வைத்து எதை மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் என்ன உள்ளது? புத்தக அலமாரி முழுவதும் அடியோடு கலைத்துப் போட்டும்; தேடிய அவரது எஸ்.எஸ். எல்.சி கண்ணில் படவே இல்லை. திருவாசக புத்தகம்தான் போன மாதம் படித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் இருக்கலாம்; என்று தாத்தா சொல்ல திரும்பவும் போனவனுக்கு; தலை சுற்றியதன் காரணம்; அங்கிருந்த ஐந்தாறு ' திருவாசக' புத்தகங்களிலும், அவருடைய எஸ். எஸ். எல் .சி. புத்தகம் இல்லை.இன்னும் எத்தனை திருவாசக புத்தகங்கள் இருக்குமோ; என்ற யோசனையுடன்; எதற்கு தாத்தா; அதைத் தேட வேண்டும்? என்று கேட்டான். என் எஸ், எஸ், எல், சி புத்தகத்துக்குக்குள்தான் எனது வாக்காளர் அட்டையை வைத்திருக்கிறேன்.இன்று SIR விண்ணப்ப படிவம் பிறப்பு அலுவலர் வருவதாக இருக்கிறார்கள். என் பெயரை 'சுப்பிரமணியம்' என்று போட்டுஇருக்கா; 'சுப்பிரமணியன்' என்று போட்டிருக்கா ; என்று நினைவில் இல்லை. எனது எஸ் எஸ். எல்.சி புத்தகத்தில் எப்படி போட்டிருக்கு என்பதும் ஞாபகத்தில் இல்லை. அதாண்டா ! அதைப் பார்த்து எடு. என்றதும்; நீங்கள் பேங்க்ல என்ன பெயர் கொடுத்துருக்கேள்? என்றதும், ஒவ்வொரு பாங்க்கிலும் ஒவ்வோரு மாதிரி எழுதி வைச்சுண்டு இருக்கா. ஆதார் கார்டில் இன்னும் கந்தர் கோளம் பண்ணிவைச்சுருக்கா. 'ஷுப்ரமணியம்' ன்னு போட்டிருக்கு. என் பெயரே எனக்கு தெரியல்லை மாதிரி இருக்கு .ஒரு வழியா இந்த தரம் என் பெயரை சரி பண்ணிடலாம் என்று இருக்கிறேன்; என்றதும்' அவர் பேச்சில் இருந்த நியாயம் உணர்ந்து, நான் அவருடைய எஸ் எஸ். எல். சி. புத்தகத்தை மும்முரமாக தேட ஆரம்பித்தேன்.

**சசிகலா விஸ்வநாதன்**

# தீபாவளி

நாளைய தினம் தீபாவளி.
இன்றைய மாலை நேரத்தில்,

பக்கத்து வீடுகளில் தீபாவளி கொண்டாட்டம் ஆரம்பம் ஆகி இருந்த நேரம், ஆறாவது படிக்கும் மீனா, தன் பக்கத்து வீட்டுத் தோழி அர்ச்சனா, தீபாவளி வெடி வெடித்துக் கொண்டிருப்பதை கண்டு கடும் கோபமாக இருந்தாள்.

" அம்மா, அம்மா! எங்க இருக்க? இங்கவாம்மா " என்று தன் தாய் பார்வதியை, சப்தமாக அழைத்தால் மீனா.

" என்னடி? ஏன்? இப்படி கத்துற!" என்று கூறிய படி கிச்சனிலிருந்து வெளியே வந்தாள் பார்வதி.

" அம்மா, பக்கத்து வீட்ல இருக்கிற, என் ப்ரண்ட்ஸ் எல்லாரும் புது டிரஸ் வாங்கிட்டாங்கம்மா. வெடி வெடிக்குறாங்க, எனக்கு மட்டும் எப்பமா புது டிரஸ், வெடி எல்லாம் வரும். இதப்பத்தி கவலைப்படாம, நீ பாட்டு கிச்சன்ல உட்கார்ந்து , உன் வேலைய பார்த்துகிட்டு இருக்க." என்று தாய் பார்வதியை நோக்கி கோபமாக கேள்வி கேட்டாள் மீனா.

"நான் என்ன பண்ண முடியும்? உங்க அப்பா வந்தா தான் உண்டு. அவரு சம்பளத்தை வாங்கிக் கொண்டு நமக்கு புது துணி, வெடி வாங்கிட்டு வருவார்." என்று பார்வதி கூற,

" அதான்ம்மா, அப்பா எப்ப வருவாரு?" என்று மீனா கேட்க,"வருஷா,வருஷம் தீபாவளிக்கு முதல் நாள் தான் தீபாவளி போனஸ் வாங்கிட்டு, அந்த காசுல தான் புது டிரஸ் , வெடி வாங்கிட்டு வருவாரு , உங்க அப்பா. மறந்து போச்சா! உனக்கு. நல்ல நாள் பொழுதுமா தண்ணிய போட்டுட்டு 5 மணிக்குள்ள வந்துருவேன்னு சொல்லி இருக்கார்." என்று பார்வதி கூற,

அதற்கு கடிகாரத்தை பார்த்த படி மீனா,

" நாளைக்கு என் பொண்ணு, மீனாவோட பிறந்தநாள். என் பொண்ணு தான் என் உலகம். அவளுக்காக நிறைய வெடி , புது துணி வாங்கி இருக்கேன். என் மனைவி பார்வதி ஒன்னும் கொறச்சல் இல்ல. அவளும் என்னை சந்தோஷமா பார்த்துகிறா " என்று சுந்தரம் கூறிக் கொண்டிருந்த பொழுது, செல்போன் சினுங்கியது.

“என்னங்க, எப்போ வருவீங்க.? தண்ணிய போட்டது போதும் குடும்பமுன்னு ஒன்னு இருக்கு மறந்து போல அளவு குடிக்காதிங்க. நாளைக்கு தீபாவளி , உங்க மக பிறந்த நாள் இரண்டும் ஒரு சேர வந்திருக்கு அவ ரொம்ப ஆர்வமா காத்திட்டு இருக்கா. சீக்கிரமா வாங்க “ என்று மனைவி பார்வதி கூற ,

“இதோ கௌம்பிட்டேன். அரை மணிநேரதிற்குள் வீட்டுக்கு வந்திருவேன். மீனா எதிர் பார்த்தபடி இருக்கட்டும். அவளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பேன். இந்த தீபாவளிய அவ மறக்க மாட்டா அந்த அளவுக்கு கொண்டு வாறேன்” , என்று போனை அணைத்து தடுமாறியபடி கிளம்பினான் சுந்தரம்.

"மாப்ள ! பார்த்து போடா. இன்னைக்கு போதை கொஞ்சம் அதிகமா இருக்குடா. நிதானமா வண்டிய ஓட்டுடா. வீட்டுக்கு போய்ட்டு போன் பண்ணு. மீனாக்கு பிறந்தநாள் வாழ்த்து சொன்னதா சொல்லிரு. நான் இப்ப கிளம்புறேன். " என்று நண்பன் மாணிக்கம் கூறி விட்டு , அங்கிருந்து வெளியேறினான்.

"ஓகேடா- மாப்ள. நான் பார்த்து போயிருவேன். நாளைக்கு எங்க வீட்டில விஷேசம் வந்திரு" என்று கூற, மாணிக்கத்தை பார்த்து கையசைத்து விட்டு, வாகனத்தை இயக்க ஆரம்பித்தான் சுந்தரம்.

தன் மகள் மீனாவுக்கு , தான் வாங்கியதை கொடுத்து, சந்தோஷ பட வைக்கும் நோக்கத்திலே, வாகனத்தை வேகமாக இயக்கினான்.

" இந்த தீபாவளி, உங்க ரெண்டு பேருக்கும் ரொம்பஸ் பெஷலா , இருக்க போகுது. பார்வதிக்கும், மீனாம்மாக்கும் நிறைய பரிசு. இதோ அப்பா வர்றேன் "என்று போதையில் புலம்பியபடி , இரு சக்கர வாகனத்தை தடுமாறிய படி தலை கவசம் அணியாமல் வேகமாக இயக்கினான் சுந்தரம்.

ஒரு நிலையில், சிறுகல் இடறிவிட , தட்டு தடுமாறி வாகனத்துடன் கீழே சரிந்தான் சுந்தரம் . வாகனம் ஒரு புறம் நகர , சுந்தரம் தரையை உரசியபடி , சாலையோரம் இருந்த மைல் கல்லின் மீது மோதினான்.
பலத்த அடி, தலையில் விழுந்தது.

'அபாயகரமான வளைவு. மெதுவாக செல்லவும்'. 'இது ஒரு பயணம். பந்தயம் அல்ல' என்ற தகவல்கள் அடங்கிய பலகை, அவன் மேல சரிந்து விழ , உயிருக்கு போராட ஆரம்பித்தான் சுந்தரம். நிச்சயமாக இந்த தீபாவளி மீனா மற்றும் பார்வதிக்கு தீராவலியாக (தீபாவ(ளி)லி) அமைய போவது உறுதி. சுந்தரத்தின் இன்ப அதிர்ச்சி இது தானோ !!!.....

அப்பா வருகைக்காக காத்து கொண்டிருப்பார்கள், மீனா போன்ற எத்தனையோ குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





*மனைவி : என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?”*

*கணவன் : ரெண்டாவது ‘ஷாக்’ எதுக்குன்னு, தான்..!*

# தினம் ஒரு சமையல்



## வஞ்சரம் மீன் குழம்பு.

தேவையான பொருட்கள்:

கிங் மீன் (வஞ்சரம் மீன்) - 2 எண் அல்லது 1 எல்பி
1 பெரிய சிவப்பு வெங்காயம்

| | |
|---|---|
| பச்சை மிளகாய் | - 2 எண் |
| பூண்டு | - 15 கிராம்பு |
| புளி | - எலுமிச்சை அளவு |
| தக்காளி | - 1 |
| கொத்தமல்லி தூள் | - 1 டீஸ்பூன் |
| மிளகாய் தூள் | - 1 டீஸ்பூன் |
| மஞ்சள் தூள் | - ½ தேக்கரண்டி |
| உப்பு | - சுவைக்க |
| வெந்தயம் | - 1 தேக்கரண்டி |
| கறி இலைகள் | - சில |
| வெல்லம் | - 1 தேக்கரண்டி |
| நல்ல எண்ணெய் | - 3 டீஸ்பூன் |

செய்முறை:



* மீனை சுத்தம் செய்து ஒதுக்கி வைக்கவும்
* புளி சாற்றைப் பிரித்தெடுத்து ஒதுக்கி வைக்கவும்.
* சிறிய வெங்காயத்தில் 5 தவிர வெங்காயத்தை உரித்து நறுக்கவும். ஒரு பெரிய வெங்காயத்தைப் பயன்படுத்தி அதை நடுத்தர அளவிற்கு நறுக்கி அவற்றில் ¼TH ஐ ஒதுக்குங்கள்.
* வறுத்த தக்காளி, ஒதுக்கப்பட்ட வெங்காயம் மற்றும் சாம்பார் தூள், தேங்காயை நன்றாக அரைக்கவும்.
* ஒரு பாத்திரத்தில் 2 டீஸ்பூன் எண்ணெயை சூடாக்கவும். எந்த எண்ணெயையும் பயன்படுத்தலாம், எண்ணெய் சூடாக இருக்கும்போது வெந்தயம் சேர்க்கவும் (இது ஒரு அற்புதமான நறுமணத்தை தருகிறது) மற்றும் கறிவேப்பிலை, ஜி.சில்லி மற்றும் வெங்காயத்தை சேர்த்து வெங்காயம் நிறமாக மாறும் வரை வறுக்கவும். பின்னர் 1 தக்காளி சேர்த்து நன்கு வறுக்கவும்.
* பின்னர் புளி சாறு மற்றும் மிளகாய், கொத்தமல்லி தூள் சேர்க்கவும்.
* இது குமிழி கிடைத்ததும், அரைத்து பேஸ்ட் மற்றும் உப்பு சேர்த்து, குறைந்தபட்சம் 20 நிமிடங்களுக்கு சமைக்கவும். கறி தடிமனாக இருந்தால் அதிக தண்ணீரைப் பயன்படுத்துங்கள்.
* வெல்லம் சேர்க்கவும், பின்னர் உங்களுக்கு விருப்பமான மீன்களை சேர்க்கவும். இந்த செய்முறைக்கு வஞ்சரம் மீன் நன்றாக செல்கிறது. மீன் சமைக்கும் வரை கறியை சமைக்கவும். கறிவேப்பிலையில் நல்ல எண்ணெயை ஊற்றி ஒரு மூடியால் மூடி மகிழுங்கள். (ஒரு தனித்துவமான சுவையைப் பெற நல்ல எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது)
* கடைசியாக சில கறிவேப்பிலை சேர்க்கவும்.
* சூடாக பரிமாறவும்.

# செம்பருத்தி நன்மைகள்



இவ்வுலகில் பலவகையான மலர்கள் இருக்கின்றன. அவை பார்ப்பதற்கு அழகானதாகவும், வண்ண வண்ண நிறங்களுடனும், விதவிதமான வாசனைகளுடன் ஒவ்வொரு நாளும் பூத்து மலர்கின்றன. பொதுவாக பூக்கள் அலங்காரம் செய்வதற்கும், கூந்தலில் பூச் சூடுவதற்கு மட்டுமே மக்கள் இந்த நாள் வரை பயன்படுத்தி வந்துள்ளனர். இருப்பினும் நம் உடலில் ஏற்படும் நோய்களுக்கு சில வகையான பூக்கள் பயன்படுகிறது என்று பலருக்கும் தெரிந்ததில்லை. நமது வீட்டு தோட்டத்தில் அதிகமாக பூத்து குலுங்கும் செம்பருத்தி பூவின் மகத்தான மருத்துவ குணங்களை பற்றி உங்களுக்கு தெரியுமா? அப்படி தெரியாது என்றால் இந்த பதிவை படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

பொதுவாக சில பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் அதிக அளவிலான இரத்த போக்கு ஏற்படும். இதனால் உடல் சோர்வு அதிமாக இருக்கும், சரியாக அவர்களுடைய பணிகளை செய்ய முடியாத அளவுக்கு உடல் வலிமையினை இழந்துவிடுவார்கள். இதற்கு சிறந்த தீர்வாக செம்பருத்தி பூ விளங்குறது. பத்து செம்பருத்தி பூவின் இதழ்களை நெய்யில் வதக்கி மாதவிடாய் காலத்தில் பெண்கள் சாப்பிட்டு வந்தால் அதிக ரத்த போக்கு ஏற்படுவது தடுக்கப்படும்.

உடலில் ரத்த விருத்தி அதிகரிப்பதற்கும், உடல் வலிமை பெறுவதற்கும் இரும்பு சத்தானது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆகவே உடலில் இரும்பு சத்தினை அதிகரிக்க நினைப்பவர்கள் செம்மருத்தி பூ இதழுடன் சம அளவு மருதம் பட்டை கலந்து ஒரு தேக்கரண்டி அளவு காலை மாலை என இருவேளை சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் இரும்புச் சத்து அதிகரிப்பதோடு, இரத்த சோகை நோய் குணமாகும்.

# வந்தது சிம்புவின் அரசன் பட அப்டேட்.. ரசிகர்களுக்கு வந்த இன்ப செய்தி, என்ன?




சிம்பு நடிப்பில் அடுத்ததாக உருவாகி வரும் திரைப்படம் அரசன். வெற்றிமாறன் இயக்கத்தில் முதல் முறையாக இப்படத்தில் சிம்பு நடிக்கவுள்ளார். இப்படத்தை கலைப்புலி எஸ். தாணு தயாரிக்கிறார். அனிருத் இப்படத்திற்கு இசையமைக்கிறார். முதல் முறையாக அனிருத்துடன் வெற்றிமாறன் கூட்டணி அமைத்துள்ள படம் இதுவே ஆகும்.

வடசென்னை உலகில் இப்படத்தின் கதை அமைக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. இதனாலேயே இப்படத்தின் மீது அதீத எதிர்பார்ப்பை ரசிகர்கள் வைத்துள்ளனர்.

இந்நிலையில், இப்படம் குறித்து ஒரு அதிரடி அப்டேட் கிடைத்துள்ளது. அதில், “ படத்தின் பூஜை வரும் 8-ம் தேதி நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. படப்பிடிப்பு 9-ம் தேதி துவங்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.







நடிகை ஷாலினி பாண்டே படுக்க வர்ச்சியான உடையில் கொடுத்த போஸ்.

வேற லெவல் ஹாட் போட்டோ ஷூட்.

# கூட்டத்தின் நடுவே அஜித்தை ரவுண்டு கட்டிய ரசிகர்கள்... AK என்ன செய்தார் பாருங்க!




தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்களில் ஒருவர் அஜித். இவர் நடிப்பில் இந்த ஆண்டு வெளிவந்த குட் பேட் அக்லி திரைப்படம் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு மாபெரும் வெற்றியடைந்தது.

தற்போது கார் ரேஸிங் கவனம் செலுத்தி வருகிறார் அஜித்.

இந்நிலையில், மலேசியாவில் உள்ள செபாங்கில் நடைபெற்ற கார் பந்தயத்தில் அஜித்தின் ரேஸிங் அணி பங்கேற்றது.

அப்போது அஜித்தைக் காண அங்கு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டு வந்தனர். ரேஸ் முடிந்த பின்னர் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் அஜித்.

அவரைக் காணவும், அவருடன் போட்டோ எடுக்கவும் ஏராளமானோர் திரண்டதால் அந்த இடமே சிறிது நேரத்தில் பரபரப்பானது. ஆனால் அஜித் அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக கூட்டத்தின் நடுவே நின்றபடி ஒரு செல்ஃபி எடுத்திருக்கிறார்.

அது மட்டுமின்றி தனி தனியாகவும் அவர் போட்டோ எடுத்துள்ளார். தற்போது, இது தொடர்பான ஸ்டில்ஸ் மற்றும் வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. இதோ,

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**